தினமணி 10 DEC 2023

# பாலியல் துன்புறுத்தலுக்கு எதிரான விழிப்புணர்வுப் பேரணி



நாமக்கல்லில் சனிக்கிழமை நடைபெற்ற விழிப்புணர்வுப் பேரணியில் பங்கேற்ற மாவட்ட ஆட்சியர் ச.உமா, அதிகாரிகள்.

நாமக்கல், டிச. 9: பெண்களுக்கு ஏற்படும் பாலியல் துன்புறுத்தலுக்கு எதிரான விழிப்புணர்வுப் பேரணி சனிக்கிழமை நடைபெற்றது.

நாமக்கல் மாவட்ட சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை சார்பில் நடைபெற்ற இப்பேரணியை, மாவட்ட ஆட்சியர் ச.உமா கொடியசைத்து தொடங்கிவைத்தார். நாமக்கல் தெற்கு அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளியில் தொடங்கி மோகனூர் சாலை, திருச்சி சாலை, டாக்டர் சங்கரன் சாலை வழியாக மீண்டும் பள்ளியை வந்தடைந்தது.

இப்பேரணியின்போது, பணிபுரியும் இடங்களில் பெண்களுக்கு ஏற்படும் பாலியல் துன்புறுத்தலுக்கு எதிரான முழக்கங்கள் எழுப்பப்பட்டன. நாமக்கல் மாவட்டத்தில், அரசுத் துறை மற்றும் தனியார் நிறுவனங்களில் பெண்களுக்கு எதிரான பாலியல் துன்புறுத்தல் நிகழ்ந்தால் உடனடியாக அதற்கான குழுவில் புகார் அளித்தால் சம்பந்தப்பட்டவர் மீது உடனடி நடவடிக்கை எடுக்கப்படும் என ஆட்சியர் ச.உமா தெரிவித்தார்.

இப்பேரணியில், மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் ப.மகேஸ்வரி, மாவட்ட சமூகநல அலுவலர் (பொ) பிரபா, மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலுவலர் சதீஸ்குமார் மற்றும் அங்கன்வாடி பணியாளர்கள், பள்ளி, கல்லூரி மாணவிகள், அரசுத் துறை சார்ந்த அலுவலர்கள் கலந்துகொண்டனர்.